அப்படியானால் திருவண்ணாமலை மாவட்டத்தில் எந்தெந்த தாலுகாக்கள் சேரும் என்ற செயற்குறிப்பு இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன்: அப்படி ஏதாவது திட்டம் இருக்குமானால் அது மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு நிச்சயம் தெரிந்திருக்கும்.

தோவாளை வட்டத்திலுள்ள கிராமங்கள்

* 134 வினா—திரு. வீ. கே. இராஜாப்பிள்ளை: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கன்னியாகுமரி மாவட்டம், தோவாளை வட்டம், தோவாளை, செண்பகராமன் புதூர், திருப்பதிசாரம் என்ற மூன்று கிராமங்களையும் இயற்கைக்கொப்ப எல்லைகளை புனரமைப்புச் செய்வதற்குரிய செயற்குறிப்பு ஏதேனும் அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: இப்பொருள் பற்றி செயற்குறிப்பு எதுவும் அரசிடம் இல்லை.

Deposits of Platinum and Gold in Salem district.

* 135 *Q.*—THIRU N. K. PALANISAMY: Will the Hon. the Minister for Industries and Electricity be pleased to state—

(*a*) whether it is a fact that large deposits of Platinum and Gold are found in chalk hills in Salem district; and

(*b*) if so, the action taken thereon?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: (அ) & (இ) சேலம் மாவட்டம், சுண்ணாம்பு மலையில் பிளாட்டினம், தங்கம் ஆகியவற்றின் படிமங்கள் பெருமளவில் காணப்படவில்லை. 1973 ஆம் ஆண்டில் தமிழ்நாடு கனிப் பொருள் வளர்ச்சித் திட்டம் மேற்கொண்ட முறையான புவியியல் ஆய்வின்போது, தோராயமாக 15 சதுர கிலோமீட்டர் பரப்பிற்கு தங்கத்துடன் பிளாட்டினம் சேர்ந்திருப்பது குறித்தும் சுட்டிக்காட்டப்பட்டது. எனினும், பிளாட்டினத்தைப் பிரித்தெடுப்பது என்பது ஆதாயம் தரத்தக்கதாயில்லை.

1975 அக்டோபர் 30]

திரு. என். கே. பழனிசாமி: சார், பிளாட்டினத்தைப்பற்றி ஆராயவில்லை, அது ஆதாயம் தரத்தக்கதாக இல்லை என்று அமைச்சரவர்கள் சொன்னார்கள். ஆனால் தங்கத்தைப்பற்றி ஆராயப்படுமா? இந்த இரண்டு உலோகங்களும் அதிக ஆதாயம் தரத்தக்கவையாக இருப்பதால் அதுபற்றி மறுபரிசீலனை செய்யப் படுமா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:

As the results of the investigation showed a concentration of only 1½ gm. of platinum and gold together per ton of rock matter, the occurrence is uneconomical.

ஒரு டன்னில் ஒன்றரை கிராம் தங்கமும் பிளாட்டினமும் சேர்ந்து இருப்பதாகவும் இது ஆதாயம் தரதக்கதாக இல்லை என்றும் தெரிவித்திருக்கிறார்கள்.

திரு. தி. பொன்னுமலை: தலைவரவர்களே, சேலம் மாவட்டத்தில் சுண்ணாம்பு மலையில் தங்கம் இல்லாவிட்டாலும் சேலம் மாவட்டத் திற்கு அருகிலே போதமலையில் தங்கம் இருப்பதாக 15 ஆண்டு களாகச் சொல்லிவருகிறார்கள். அதுபற்றி அரசு பரிசீலனை செய்திருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: சுண்ணாம்பு மலையைப் பொறுத்த வரையில்தான் பதில் இருக்கிறது; தனிக் கேள்வி போடவும்.

திரு. என். கே. பழனிசாமி: சார், 1954 ஆம் ஆண்டு 'ஜியால ஜிக்கல் சர்வே ஆஃப் இந்தியா' மேற்கொண்ட சர்வேயின்படி, கொல்லிமலையிலும் கஞ்சமலையிலும் ஏராளமான தங்கமும் அலுமினியமும் இருப்பதாகச் சொல்லப்பட்டது. அதுபற்றி மறுபரிசீலனை செய்ய இந்தச் சர்க்கார் முயற்சி செய்யுமா?

THE HON. THIRU S. J. SADIQ PASHA: The presence of platinum along with gold was indicated during the systematic geological investigations taken up by the Tamil Nadu Mineral Development Project in 1973 covering an area of nearly 15 sq. km. The recovery of platinum is, however, uneconomical.

1973-ல் தான் சோதனை செய்யப்பட்டதாக விவரம் இருக்கிறது. தங்கம் கிடைத்தால் நமக்கு லாபம்தான். மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு தங்கத்தில் இருக்கிற ஆர்வத்தைப் பார்த்து, வேண்டுமானால் மீண்டும் பரிசீலனை செய்யச் சொல்லலாம்.

திரு. கே. எ. வகாப்: தலைவர் அவர்களே, வட மாநிலங்களில் எல்லாம் இப்போது இப்படிப்பட்ட நிலத்தை ஆகாய விமானம் மூலம் ஆராய்ச்சி செய்கிற பணி தீவிரமாக நடைபெறுகிறது என்று பத்திரிகையிலும் படங்களிலும் காட்டப்படுகிறது. அப்படிப்பட்ட நிலங்களின் அடியிலுள்ள கனிப்பொருள்களை ஆராய்ச்சி செய்வதற்கு நம் மாநிலத்திலும் ஆராய்ச்சிகளைச் செய்ய அரசு ஏற்பாடு செய்துள்ளதா, இனிமேலாவது செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: அது பற்றிய விவரம் இப்போது இல்லை.

திரு. கே. என். குமாரசாமி: தலைவர் அவர்களே, இந்தத் தங்கம் ஒரு டன்னுக்கு 1½ கிராம் கிடைக்கிறது, அதைத் தோண்டி எடுத்தால் நஷ்டம் ஏற்படும் என்று ஆராய்ச்சியாளர்கள் சொல்லுகிறார்கள் என்று சொல்லப்படுகிறது. அதுமாதிரி கூடலூர் மலைகளிலும் ஆராய்ச்சி செய்யப்பட்டு நிறுத்தப்பட்டுள்ளதா? அது சம்பந்தமாக அரசு அறிக்கை ஒன்று தருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: இப்போது உள்ள பதில் சேலம் சுண்ணாம்பு மலையைப் பொறுத்துத்தான் உள்ளது.

மின்சாரம் எடுத்துச் செல்லும்போது ஏற்படும் இழப்பு

*** 136 வினா—திரு. என். கிட்டப்பா:** மாண்புமிகு தொழில்-மின்சாரத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மின்சாரம் எடுத்துச்செல்லும்போது ஏற்படும் சேதாரத்தைத் தடுப்பதற்காக தமிழ்நாடு மின் வாரியம் புதிய நடவடிக்கைகள் ஏதேனும் எடுத்துள்ளதா?